## சுருக்கம்

வேளாண்மை – வேளாண் உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களான சட்டமன்ற உறுப்பினர், சிறுவிவசாயி (ஒருவர்), பெரு விவசாயி (ஒருவர்), விவசாய தொழிலாளி (ஒருவர்), மற்றும் விவசாய சங்கங்கள் பிரதிநிதி (ஒருவர்) ஆகியோரின் பதவிக்காலத்தை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.உ.6) துறை

அரசு ஆணை (நிலை) எண். 78. நாள்: 17.02.2016

திருவள்ளுவர் ஆண்டு,2047 மாசி–5

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.107, வேளாண்மை (SFPP) துறை, நாள் 26.2.1992
2. அரசாணை (நிலை) எண் 121, வேளாண்மை (SFPP) துறை,நாள் 22.02.1993
3. அரசு கடித எண்.44559/வே.உ.2/1995–4, வேளாண்மைத் (வே.உ.2) துறை, நாள். 20.02.1996
4. மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம் அவர்களின் கடித எண்.வே.1551/2012, நாள் 29.02.2012.
5. வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.திட்டம்.1/153221/2011, நாள். 06.02.2013, 15.10.2015 மற்றும் 09.12.2015.

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், விவசாயிகள் குறைதீர்க்கும் குழுவும், வேளாண்மை உற்பத்திக் குழுவும் ஒன்றாக இணைக்கப்பட்டு வேளாண் உற்பத்தி மற்றும் குறை தீர்க்கும் குழுவாக உருவாக்கப்பட்டு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**1. துறை சார்ந்த உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித்தலைவர் | தலைவர் |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | உறுப்பினர்– செயலர் |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர் |
| 4 | கண்காணிப்புப் பொறியாளர் (பாசனம்) | உறுப்பினர் |
| 5 | திட்ட அலுவலர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) | உறுப்பினர் |
| 6 | கண்காணிப்புப் பொறியாளர் (மின்சாரம்) | உறுப்பினர் |
| 7 | துணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) | உறுப்பினர் |
| 8 | தனி அலுவலர் (வேளாண் விற்பனைக்குழு) | உறுப்பினர் |
| 9 | இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) | உறுப்பினர் |
| 10 | கண்காணிப்புபொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) | உறுப்பினர் |
| 11 | துணை இயக்குநர் (புள்ளியியல் துறை) | உறுப்பினர் |

2. <u>துறை சாரா உறுப்பினர்கள்</u>

| | | |
|---|---|---|
| 12 | சட்டப்பேரவை உறுப்பினர் | உறுப்பினர் |
| 13 | சிறுவிவசாயி (ஒருவர்) | உறுப்பினர் |
| 14 | பெரு விவசாயி (ஒருவர்) | உறுப்பினர் |
| 15 | விவசாய தொழிலாளி (ஒருவர்) | உறுப்பினர் |
| 16 | விவசாய சங்கங்களின் பிரதிநிதி (ஒருவர்) | உறுப்பினர் |

2) மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வேளாண்மை உற்பத்திக் குழு கூட்டத்திற்கு முன்னதாக நடத்தப்பட வேண்டுமென்றும் இக்கூட்டத்திற்கான கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் 15 நாட்களுக்குள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும், அதன் நகலினை வேளாண்மை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் ஆணை வெளியிடப்பட்டது.

3) மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாவட்ட வேளாண் உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் என நிர்ணயம் செய்து அரசு அனுமதி வழங்கியுள்ளது.

4) மேலே 4–ல் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம் தமது கருத்துருவில், பத்தி ஒன்றில் கூறப்பட்டுள்ள குழு உறுப்பினர்கள் தவிர இக்குழுவிற்குத் தேவையான பிற அரசுத் துறை அலுவலர்களையும் அவசியமிருப்பின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதியின் பேரில் வேளாண்மை உற்பத்தி குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு வேளாண்மை உற்பத்தி குறித்த பிரச்சனைகள், குழுவில் கண்டறியப்பட்டு, அதன் விவரம் அவ்வப்போது அரசிற்கு தெரிவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். மேலும், இக்குழுவிற்கு வேளாண்மை சார்ந்த / துறை சாரா உறுப்பினர்களான சட்டப் பேரவை உறுப்பினர், சிறு விவசாயி, பெரு விவசாயி, விவசாய தொழிலாளி மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதி ஆகிய உறுப்பினர்களின் பதவி நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டபோது, எத்தனை ஆண்டு காலம் அவர்கள் உறுப்பினர்களாக பதவி வகிக்கலாம் என்பது குறித்து கால நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும், இதனால் ஒருமுறை இக்குழுவில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படும் மேற்கூறிய ஐந்து உறுப்பினர்களின் பதவிக் காலம் அவர்களின் ஆயுட்காலம் முழுவதும் உறுப்பினர் பதவியில் இருக்கும்படியான நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இளைய தலைமுறை விவசாயிகளைத் தேர்வு செய்து உறுப்பினர்களாக நியமிக்கும் சூழ்நிலை ஏற்படாமல் உள்ளதாகவும், மேலே கூறப்பட்ட உறுப்பினர்களில் சட்டமன்றப் உறுப்பினர் நீங்கலாக ஏனைய நான்கு உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 3 ஆண்டுகள் என நிர்ணயம் செய்யப்படுமேயானால் பல பழைய மற்றும் புதிய தலைமுறை முன்னோடி விவசாயிகளை இக்குழுவில் இடம் பெறச் செய்து அவர்களுக்கு வாய்பளிப்பதன் மூலம் புதிய நவீன கருத்துக்களையும் கேட்டு வேளாண்மைத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்றும், வேளாண்மை உற்பத்திக் குழுவில் துறை சாரா உறுப்பினர்களில், சட்டமன்ற உறுப்பினர் தவிர ஏனைய உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 3 ஆண்டுகளாக நிர்ணயிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5) மேலே 5–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை இயக்குநர் அவர்கள் வேளாண்மை உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவினை அரசாணை (நிலை) எண்.107, வேளாண்மைத் (SFPP) துறை நாள் 26.2.92–ல் உருவாக்கப்பட்டதாகவும், வேளாண்மை உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவினை உருவாக்கியும் மற்றும் மேற்கண்ட குழுவின் கூட்டம்

ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது வெள்ளி அன்று விவசாய குறை தீர்வு கூட்டம் நடந்த பிறகு நடக்க வேண்டும் என்று அரசாணை நிலை எண்.121, வேளாண்மைத் (SFPP) துறை, நாள் 22.2.1993–ல் ஆணையிடப்பட்டுள்ளதாகவும், மாவட்ட வேளாண் உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் குறித்து வெளியிடப்பட்ட அரசு கடித எண்.44559/வே.உ.2/95–4, நாள்.20.02.1996–ல் தெரிவித்து உள்ளவாறு இரண்டு ஆண்டுகள் என நிர்ணயம் செய்து கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும், இவ்விவரம் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டதாகவும், சில மாவட்டங்களில் இம்முறை கடைபிடிக்கப்படாததால் அனைத்து மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான பதவிக் காலத்தை நிர்ணயம் செய்யவே அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அரசாணை (நிலை) எண்.107, வேளாண்மைத் (SFPP) துறை, நாள்.26.02.1992–ன்படி வேளாண்மை உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவில் சட்டப்பேரவை உறுப்பினர்களும் அரசு சாரா உறுப்பினர்களாகவே வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அவர்களின் பதவிக் காலம் வரை உறுப்பினர்களாக இருக்க அனுமதியும், ஏனைய அலுவல் சாரா உறுப்பினர்களான சிறு விவசாயி, பெரு விவசாயி, விவசாயத் தொழிலாளி மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதி ஆகிய உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாக நியமனம் செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

6) வேளாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று, வேளாண் உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களான சட்டப் பேரவை உறுப்பினர்கள் அவர்களது பதவிக் காலம் வரையிலும், ஏனைய உறுப்பினர்களான சிறு விவசாயி (ஒருவர்), பெரு விவசாயி (ஒருவர்), விவசாய தொழிலாளி (ஒருவர்), மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதி (ஒருவர்) ஆகியோரின் பதவிக்காலத்தை 2 ஆண்டுகளாக நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

7) அரசாணை (நிலை) எண்.107, வேளாண்மைத் (SFPP) துறை, நாள்.26.02.1992–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில் தெரிவித்துள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளைப் பின்பற்றுமாறு வேளாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8) வேளாண்மை உற்பத்தி மற்றும் குறைதீர் குழுவின் மாதாந்திர கூட்ட அறிக்கையினை 15 நாட்களுக்குள் தவறாமல் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களை அறிவுறுத்துமாறு வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி //

ச.விஜயகுமார்
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை –5.
முதன்மை செயலர்/ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, சென்னை –32.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை –5.
முதன்மை செயலர்/ஆணையர், பொருளியல் மற்றும் புள்ளியல் துறை, சென்னை– 6.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கீழ்ப்பாக்கம், சென்னை –10.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம், சேலம்.

அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை.
அனைத்து மாவட்ட கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்.
அனைத்து மாவட்ட துணை இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை .
அனைத்து மாவட்ட கண்காணிப்புப் பொறியாளர்,
தேசிய நெடுஞ்சாலைத் துறை.
தொடர்பு கோப்பு எண் 6531/வே.உ.6/2012.
இருப்பு கோப்பு /உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.